மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துக் கழகங்களும் பொறியியல் கழகங்களும் ஒழுங்காகயிருந்து கொண்டிருக்கிறது. அதிலே குறைபாடுகள் ஏற்படும் வகையில் இவைகளுக்கெல்லாம் சான்றிதழ்கள் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் தயாராகயில்லை.

Central Subsidy for the H.S.D. Oil consumed by the Public Transport

*Q.No.748 : THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have any proposal to seek a subsidy from the Centre on the H.S.D. Oil consumed by the public transport; and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) இம்மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவைப்படும் டீசலை சற்று விலைகுறைத்தோ அல்லது சற்று குறைந்த சுங்க வரியுடனோ அளிக்கும்படி கேட்ட இம்மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து விட்டது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்கின்ற டீசல், பெட்ரோல் ஆகியவைகள் நமக்கு வருகின்றபோது, மத்திய அரசாங்கம் டீசலை லிட்டர் ஒன்று ரூ. 3 சில்லறைக்கும், பெட்ரோல் லிட்டர் ஒன்று ரூ. 6 சில்லறைக்கும் விற்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே, இறக்குமதி செய்கிறபோது, வெளி நாடுகளிலே விலையேற்றம் செய்த பிறகும்கூட, டீசலின் விலை லிட்டர் ரூ. 1.65 என்றும், பெட்ரோல் லிட்டர் ரூ. 1.61 என்றும் ஆகிறது. ஆகவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த லெவலிலே அங்கே விலையிருக்கும்போது, இங்கே மத்திய அரசாங்கம் நமக்கு விலையைக்கூட்டிக் கொடுக்கிறார்கள். அதனால், நாம் பாதிக்கப்படுகிறோம், கட்டண உயர்வின் காரணமாக, மாநில அரசையும், நம்முடைய கஜானாவையும், மக்களையும் சுரண்டுவதற்காக சென்ட்ரல் கவர்ன்மென்ட் இப்படி விலையை உயர்த்தி வருகின்றபோது, அந்தச் சுமை மக்கள் தலையிலே விழுகிறது. அதனால், மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஒரு புரட்டஸ்டாக மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; தலைவர் அவர்களே, இதையெல்லாம் உணர்ந்துதான், இதற்கு முன்பே 2, 3 முறைகள் இதைப் பற்றி கடிதம் எழுதியிருக்கிறோம். அதற்குமேல், அவர்களுக்கு இருக்கும் சங்கடமான சூழ்நிலைகளை அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். இதற்குமேல் நாம் எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. இந்த வகையில் நாம் அவர்களுக்குக் கடிதம் மூலமும், சந்திக்கின்றபோதும் சொல்கிறோம். அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, எவ்வளவோ எழுதியும் பலனளிக்கவில்லை, இனிமேல் நாம் என்ன செய்வது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். தற்போது பஸ் கட்டணத்தைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியத்திலே பதில் கூறுகின்றபோது, தற்போது கட்டண உயர்வு இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும், ஐ.எம்.எப். சில கன்டிஷன்களைப் போட்டு, அதை அக்சப்ட் செய்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறபடி, உள்நாட்டு கச்சா எண்ணெய் டன் ஒன்று ரூ. 391 என்றிருந்ததை, ரூ. 1187 என்று உயர்த்தியிருப்பதாகவும், அது இன்னும் உயரப்போகிறது, அந்த அளவுக்கு ஐ.எம்.எப்—க்கு கமிட்மென்ட் செய்திருக்கிறார்கள். இதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று சொல்லும்போது, அந்தச் சூழ்நிலையிலே நீங்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தப் போகிறீர்களா? அல்லது வேறு என்ன செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் தற்போதுக் பேருந்து கட்டணங்களை உயர்த்தப் போவதில்லை என்று மானிய கோரிக்கைக்கு பதில் சொல்லும்போது சொல்லியிருக்கிறேன். ஆனால், மத்திய அரசாங்கம், பேருந்து கட்டணத்தை உயர்த்தாததால்தான் நஷ்டம் ஏற்படுகின்றது என்பதை நமக்கு அறிவுரையாகக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும், மக்கள்மீது சுமையை மேலும் சுமத்தக்கூடாது என்ற அடிப்படையிலேதான், கொஞ்சம் இதைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வருகிறோம். (குறுக்கீடு) சட்டமன்றம் மேலும், மீண்டும் கூடாமல் இருக்கப் போவதில்லை. அப்போது மீண்டும் இதைப்பற்றி விவாதிக்கலாம். அல்லது இப்போதே இதைப் பறறி விவாதிக்க வேண்டுமென்றாலும், அதைப்பற்றி பேசி முடிவு செய்யத் தயாராக இருக்கிறோம். அதையெல்லாம் எதிர்பார்த்து நாங்கள் இதைச் செய்யவில்லை. ஆனால், எங்களுக்கு இருக்கின்ற எண்ணமெல்லாம், மக்கள் மீது இதை மேலும் சுமத்தக் கூடாது என்பது தான். அதனால், அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், மத்திய அரசாங்கத்தை டீசல். பெட்ரோல் ஆகியவைகளின் விலையைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தியும், அவர்களுக்கு இருக்கின்ற சங்கடமான சூழ்நிலையை அவர்கள் சொல்லு

கிறார்கள் ஆகவே, அந்த அளவுக்கு மாநில அரசு இதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த டீசல், பெட்ரோல் விலையைக் குறைப்பது பற்றி மத்திய அரசிடம் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தியாவில் பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் 60% தான் இறக்குமதி செய்யப்படுகின்றது. மீதி 40% பெட்ரோலிய கச்சாப் பொருள்கள் உள்நாட்டிலேயே கிடைக்கிறது. எனவே உள் நாட்டிலே கிடைக்கக்கூடிய அந்த 40 சதவீதம் பெட்ரோலிய கச்சாப் பொருள்களை இம்மாதிரியான அரசு போக்குவரத்துக்கு வேண்டிய டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களை சகாய விலையில் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி இதிலே நீங்கள் குறைந்த விலையிலே கொடுக்கவேண்டுமென்றும் அல்லது வரியைக் குறைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் நாம் எழுதியிருக்கிறோம். மத்திய அரசாங்கத் திற்கு, கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்திருந்தால் 40 சதவீதம் அளவிலே கொடுத்திருக்க முடியும். மீண்டும் எழுதுவதிலே நமக்கு ஒன்றும் சங்கடம் கிடையாது, அதே பதில் தான் மீண்டும் வரும். இதைக் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டி எழுதத் தயாராக இருக்கிறோம்.

சென்னையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைக் கட்டண பயணச் சீட்டுகள்.

*வினா எண் 749— திரு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மாணவர்களுக்குச் சலுகை கட்டண பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ளதைத் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற புகார் அரசுக்கு கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்

(ஆ) மாணவர்களுக்கான சலுகைக்கட்டண பயணச் சீட்டுகள் பின்வரும் முறைகளில் தவறாகப் பயன்படுத்தப்படு கின்றன

(1) மாணவர் அல்லாத ஏனையோர் சிலர் மோசடியாகவோ பொய்யாகவோ மாணவர்கள் என்கிற அத்தாட்சி (பற்ற மாணவர் சலுகைக் கட்டண பயணச் சீட்டைப் பயன்படுத்தி வருகின்றனர்,